# தமிழ்ப்பெண்களுக்கெதிரான வன்முறைகள்: தமிழ்ப் பத்திரிகைச் செய்திகளின் உள்ளடக்கப்பகுப்பாய்வு

**கலாநிதி (திருமதி) சிவாணி சண்முகதாஸ்**
சந்தைப்படுத்தல் திணைக்களம்
முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*shanshivany@uni.jfn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்**

போருக்குப் பின்னரான இலங்கையில் தமிழர்கள் பற்றிய ஆய்வுகள் அவர்களது சமூக, பொருளாதார, கலாசார, சட்ட நிலமைகளில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு அவசியமாகின்றது. இலங்கையின் 30 ஆண்டுகால யுத்தமானது தமிழ்ப் பெண்களின் வாழ்க்கையில் பல விதமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. யுத்த காலத்தில் மாத்திரமல்லாது யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் கூட பெண்களுக்கெதிரான வன்முறைகள் குறைந்து போகாமல் தொடர்ந்த வண்ணமே உள்ளன. போருக்குப் பின்னரான இலங்கையில் தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகளை செய்திகளாகப் பிரசுரிக்கும் தமிழ்ப்பத்திரிகைகளில் வன்முறைச் செய்திகளை உள்ளடக்கப் பகுப்பாய்வு செய்து பெண்கள் தொடர்பான வன்முறை வடிவங்களை வகைப்படுத்தி தமிழ்ச் சமூகத்தினரிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதை இவ் ஆய்வு மையப்படுத்தியுள்ளது. பெண்கள் மீதான வன்முறை சார்ந்த 142 பத்திரிகைச் செய்திகளைக் கொண்டு முதல் நிலை உள்ளடக்கப் பகுப்பாய்வில் 111 விளக்கக் குறியீடுகளும் இரண்டாம்நிலை பகுப்பாய்வில் 48 eLCL வகையான குறியீடுகளும் இறுதியாக 14 விதமான வன்முறை வடிவங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ் வன்முறை வடிவங்களாவன உறவுகள் காணாமல் ஆக்கப்படுதல், பாலியல் வன்கொடுமை, கொலை செய்தல், பாலியல் துஷ்பிரயோகம், கடத்தல், கற்பழிப்பு, தவறான வீடியோ பதிவுகள் செய்தல், சமூக வலைத்தளங்களினூடாக ஏமாற்றுதல், கொள்ளையடித்தல், துன்புறுத்தல், சொத்துக்களை மிரட்டிப் பறித்தல், பாலியல் இலஞ்சம், கர்ப்பிணி நிலையில் தாக்குதல்கள், பிறப்புறுப்புச்சிதைப்பு என்பனவாகும். இவ் வன்முறைகள் காரணமாக உடல் மற்றும் உள ரீதியாக பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்ட ரீதியான நீதியான நியாயங்களை வழங்குவதற்கும், உளவியல் ஆதரவுகளை வழங்கவும் இவ் ஆய்வானது பரிந்துரை செய்கின்றது.

**திறவுச் சொற்கள்** : தமிழ்ப் பெண்கள், வன்முறைகள், தமிழ்ப்பத்திரிகை, உள்ளடக்கப் பகுப்பாய்வு

**அறிமுகமும் ஆய்வுப்பின்னணியும்**

பெண்களுக்கெதிரான வன்முறையானது சுகாதார மற்றும் சமூக நிலைமைகளில் மிகவும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற மிகமுக்கிய பிரச்சினையாக கொள்ளப்படுகிறது. பெண்களுக்கெதிரான வன்முறையானது உலகம் முழுவதும் பேசப்படும் முக்கியதொரு எண்ணக்கருவாக கருதப்படுகின்றது. இது உடல், உள மற்றும் பாலியல் சார்ந்து பெண்கள் மீது செலுத்தப்படும் பயமுறுத்தல், கட்டாயப்படுத்தல், துஷ்பிரயோகம் மற்றும் தாக்குதல்களைக் குறித்து நிற்கும்.

சீனப் பழமொழியொன்றின் கருத்துப்படி, உலகில் 50% மான மேகக்கூட்டங்கள் பெண்களுடையதாகும் என்பதாகும், இதிலிருந்து உலகில் பெண்கள் எவ்வாறு ஈடுபாடுடையவர்களாக இருக்கின்றார்கள் என்பது புலனாகிறது. உலகின் பொருளாதார நிறைவுக்கான அரைவாசிப்பங்களிப்பானது அவர்களுடையதாகக்காணப்படுகிறது என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் பெண்கள் மீதான அக்கறையும் பொருளாதாரத்தில் அவர்களுடைய பங்கும் வெகுவாக உணரப்பட்டிருப்பதால், அவர்கள் மீதான வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதில் பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் கூடுதல் கவனமெடுக்கின்றன. முப்பது வருட கால யுத்தத்தின் அடிப்படையானது இலங்கையில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை உருவாக்கியது. இந் நீண்ட கால யுத்தத்தின் மிகப்பெரிய விளைவானது அதிக பெண்களை விதவைகளாகவும் தமது குடும்பங்களை தலைமை தாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் உருவாக்கியுள்ளது. போர்ச்சூழலில் ஏற்பட்ட துன்பியல் நிலைகளுக்கு மேலதிகமாக, யத்தத்திற்கு பின்னர் அவர்களின் துன்பநிலைகள் அதிகரித்துவிட்டன எனக்கூறலாம். போர்ச்சூழலில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகளவாக இருந்ததற்கான ஆதாரங்கள் பலவற்றைக் காணமுடியும் (உதாரணம் Jeyaraj 2000)

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் முடிந்துவிட்டதற்கான ஆதாரங்கள் இல்லை. இவ் வன்முறைகள் பல பரிமாணங்கள் பெற்று பல்வேறு வடிவங்களில் உருவாகியுள்ளதனை பல ஆதாரங்களினூடாக அறிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது. (Jeyaraj, 2000)

வட மாகாணத்தின் தமிழ்ப்பெண்கள் போர் சார்ந்த வன்முறைகளை அனுபவித்தனர், பல பெண்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதுடன் பல பேர் இறந்துள்ளனர். அநேக பெண்கள் காயமடைந்ததுடன் உடலியல் மற்றும் உளவியல் பலவீனத்தை அனுபவித்தவண்ணம் உள்ளனர். யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் பல பெண்கள் சிறைகளிலடைக்கப்பட்டு தமது குடும்ப அங்கத்தவர்களோடு தமது துன்பநிலைகளைப் பகிர்ந்து கொள்ள முடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டனர்: இவ்வாறு தடுக்கப்பட்ட பெண்களில் ஒருசிலர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டும் ஏனையவர்கள் தடுத்துவைக்கப்பட்டுமுள்ளனர். (Minority Rights Groups, International Report, 2013)

இலங்கைப் பொருளாதாரத்தில் தற்போதும் காணப்படுகின்ற ஆணாதிக்க சமூக அரசியல் நிலமைகளானவை தொடர்ந்தும் பெண்கள் வேறுபடுத்தப்படுவதற்கான அடிப்படையாக அமைந்திருக்கிறது. போருக்குப்பின்னர் பெரும்பாலான பெண்கள் குடும்பத்தில் பொருளாதார கட்டமைப்புக்கான பிரதான வருமானம் ஈட்டுபவர்களாக காணப்படுகின்றனர். யுத்தத்திற்குப் பின்னர் பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் பல வலுவூட்டல் செயற்பாடுகளை முன்னெடுத்தபோதும், அரசாங்கம் புதிய கொள்கைகளால் சட்டங்களை உருவாக்கிய போதிலும், பெண்களுக்கெதிரான வன்முறைகள் குறைந்தபாடில்லை. இவ் வன்முறைகளை நாளாந்தம் பதிவு செய்து சமுகத்திற்கு வெளிப்படுத்துகின்ற முக்கிய ஊடகமானது பத்திரிகைகளாகும். பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பான சில ஆய்வுகள் தமிழில் வெளியீடு செய்யப்பட்டிருப்பினும் தமிழ்ப் பத்திரிகைகளில் தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக எழுதப்பட்ட செய்திகளின் உள்ளடக்கப்பகுப்பாய்வானது இதுவரை ஆய்வாளர்களால் முன்னுரிமைப்படுத்தப்படவில்லை. இவ் ஆய்வானது இவ் இடைவெளியைக் குறைத்து தமிழ்ப்பத்திரிகைகளில் பெண்கள் மீதான வன்முறைகளின் உள்ளடக்கம் எவ்வாறு உள்ளது என்னும் ஆய்வு வினாவினூடாக பெண்களுக்கெதிரான வன்முறைகளின் பரிமாணங்களை தமிழ்ச்சமூகத்திற்கு எடுத்துச்சொல்வதற்கு முயல்கின்றது.

**ஆய்வு நோக்கங்கள்**

தமிழ்ப் பத்திரிகைகளில் காணப்படும் பெண்கள் மீதான வன்முறை சார்ந்த செய்திகளின் உள்ளடக்கங்களைப் பகுப்பாய்வு செய்தல்.
தமிழ்ப்பெண்கள் மீதான வன்முறைச் செய்திகளை வகைப்படுத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

உலகம் முழுவதும் பெண்களும் சிறுமிகளும் தொடர்ச்சியாக வன்முறைக்கு ஆளாகுவதாக பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. (Heise, 1994: Crawlay and Leser, 2004) பெண்களுக்கெதிரான வன்முறையானது பாலியல் அடிப்படையில் உருவாகியுள்ளதாகவும் பல்வேறு விதமான வடிவங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. Adriana, (1996) வின் ஆய்வின் படி இவ் வன்முறையானது, இழிவுபடுத்துதல், அவமானப்படுத்துதல், மிரட்டுதல், கோபமான வார்த்தைகளைப் பிரயோகித்து ஏசுதல், கட்டாயப்படுத்துதல், பொருளாதாரம் மற்றும் உணர்வுகளை மையப்படுத்தி துன்புறுத்தல், பாலியல்ரீதியான சேஷ்டைகள், கற்பழித்தல், நெருப்பால் சுடுதல், தொங்கவிடுதல், பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் வன்கொடுமை, ஈனப் பேச்சு மற்றும் நடத்தைகளால் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தல் என வகைப்படுத்துகின்றார். இவ்வாறு வெவ்வேறுபட்ட வன்முறைகளின் வடிவங்களானவை குடும்ப அமைப்புக்களில் அதிகம் காணப்படுவதோடு இதற்கான பின்னணிகளைச் சரியாக அடையாளம் காணமுடியாத அளவிற்கு இவை தொடர்ந்தவண்ணம் உள்ளன.

ராதிகா (1995) பெண்களுக்கெதிரான வன்முறைகளை பின்வருமாறு வகைப்படுத்துகின்றார். சீதனக்கொடுமை, திருமண பந்தத்தின் இணைப்பால் கட்டாய பாலியல்க் கொடுமை,

கணவர் தவிரந்த ஏனையவர்களினால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள்(கணவனால் மற்றும் கணவன் சார்ந்த உறவுகளால் மேற்கொள்ளப்படும் உடலியல், உளவியல் மற்றும் பாலியல் வன்கொடுமைகள்). சமூகத்தில் பொதுவான அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள். சக ஊழியர்கள், மேலதிகாரிகள், அயலவர்கள், ஏனைய சமூக அங்கத்தவர்களால் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக்குறிக்கும். அரசநிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் உடலியல், உளவியல் மற்றும் பாலியல் வன்முறைகள்.

குமாரசுவாமி (1992) தனது ஆய்வில் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார்.

பெண்களாக இருப்பதும், பாலியல் உணர்வினைத் தீர்த்துக்கொள்வதற்காக படைக்கப்பட்டவள் பெண் என்பதும் ஆணுக்கான அத்தேவையை பூர்த்தி செய்வதற்காக உள்ள பாலியல் உறவு என சமுகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட காரணம். சமூகத்தில் பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையில் இருக்கும் தொடர்பு நிலை. பெண்கள் தந்தை, கணவன், தமையன், தம்பி ஆகியோருக்கு கட்டுப்பட்டவளாகவும் திருமணத்தின் போது நிறைந்த சொத்துக்களோடு வாழ வேண்டுமென எதிர்பார்க்கப்படும் சமூக நிலைமை. போர் மற்றும் வன்முறை இடம்பெறும் பிரதேசங்களில் உள்ள சமூகத்தவர்கள் பெண்களை ஆண்களின் சொத்துக்களாக கருதுவதனால் கற்பழிப்பு மற்றும் அவர்களைக் கீழ்நிலைப்படுத்தும் வன்முறைகள் காணப்படுகின்றது. Margaret Schuler (1992) பெண்களுக்கெதிரான வன்முறைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்.

வெளிப்படையான உடலியல் துஷ்பிரயோகம். (குடும்பத்திலும், வேலைத்தளங்களிலும் மேற்கொள்ளப்படும் பாலியல் வன்கொடுமைகள்)

உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் (சிறைவாசம், கட்டாய திருமணங்கள்)

உடலியல், உளவியல் நலனுக்குத் தேவையான வளங்களை இழக்கச்செய்தல். (சுகாதாரம். நிறையுணவு, கல்வி, வாழ்வாதாரங்களை இழக்கச்செய்தல்)

Adriana Gomez (2001) என்பவர் தனது ஆய்வில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை இரண்டுவிதமாக பாகுபடுத்துகின்றார். ஒன்று ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைகள் அடுத்தது இயக்கப்பட்ட வன்முறைகளாகும். இங்கு ஒழுங்குபடுத்தப்பட்ட வன்முறையானது ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல்க் கட்டமைப்புக்களின் விளைவினால் பெண்களுக்கெதிராக ஏற்படும் வன்முறைகள் (உதாரணமாக: வாழ்வாதாரமின்மை, வறுமை, கணவன் கொடுமை, சமூக அந்தஸ்தின்மை, கல்விப் புறக்கணிப்பு, வேறுபடுத்துதல்) என்பனவையாகும்.

வன்முறையென்பது இன்னொருவரை உடலியல் ரீதியாக துன்புறுத்தும் செயற்பாடு எனவும் (Gelles and Strans 1979) பால்நிலை வன்முறையென்பது பால்நிலை அதிகார

முறைமையினை வலுப்படுத்துவதற்காக எதிர்ப்பாலார் மீது மேற்கொள்ளப்படும் அதிகாரம் அல்லது கட்டாயப்படுத்தல் ஆகும்.

Lizkelly (1998) இன் ஆய்வின் முடிவின்படி பாலியல் வன்முறையென்பது உடலியல் மற்றும் வாய்மொழி மூலமான, கட்புலனான அல்லது பாலியல் ரீதியான வன்முறையானது பெண்ணையோ அல்லது சிறுமியையோ மனத்தாக்கம், மன உளைச்சலுக்கு உள்ளாக்குவதோடு உடலியல் ரீதியான தாக்கங்களையும் உருவாக்குவதாக இருக்கும்.

பெண்களுக்கெதிரான வன்முறை என்பது பாலின வேறுபாடுகளினடிப்படையில் பெண்கள் அல்லது சிறுமிகள் மீது உளவியல் அல்லது உடலியல் மற்றும் பாலியல் துன்புறுத்தல்களால் உடலாலும் மனதாலும் அவர்களை சோர்வுக்கு உள்ளாக்கும் நிலை என பொருள்படும் (United Nations, 2013) இவ் வன்முறைகளானவை பலவாறாகக் காணப்படலாம். உதாரணமாக: கணவனால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள், கற்பழிப்பு, பாலியல் தாக்குதல் மற்றும் பிறரால் (கணவன் தவிர்ந்த வேறு நபர்களால்) நடாத்தப்படும் பாலியல் வன்முறைகள், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், கட்டாய விபச்சாரம், கடத்தல், சிறுபராய கட்டாயத்திருமணம், பெண் பிறப்புறுப்புச்சிதைவு, தீங்கு விளைவிக்கும் பாரம்பரிய நடைமுறைகள், கருக்கலைப்பு, மரியாதைக்கொலை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. (Garcia Moreno et, al 2015)

**ஆய்வு முறைமை**

இவ் ஆய்வானது பண்பியல் சார்ந்த ஆய்வு முறையைப் பின்பற்றி ஆய்வு வினாக்களுக்கு விடை காண முயற்சிக்கின்றது. ஏற்கனவே அறிந்து கொள்ளப்பட்ட எண்ணக்கருக்களை பரிசீலனை செய்வதை இவ்ஆய்வானது நோக்காகக்கொண்டிருக்கவில்லை தமிழ்ப்பத்திரிகைகளில் வெளிவந்த பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான செய்திகளை எண்ணக்கரு பகுப்பாய்வு செய்யும் தேவைப்பாடு காரணமாக இவ்ஆய்வானது பண்பியல் சார்ந்த ஆய்வு முறையினைப்பின்பற்றியுள்ளது. (Silverman ,2000)

இங்கு ஆய்வுக்கான தரவுகள் தமிழ்ப்பத்திரிகைகளான வலம்புரி, உதயன், வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலிருந்து சேகரிக்கப்பட்டன.

இவ் ஆய்வானது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தமிழ்ப்பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளில் தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகள் சார்ந்த 142 செய்திகளை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது. முதலாம்நிலை உள்ளடக்கப்பகுப்பாய்வு 111 உள்ளடக்கங்களில், இவை தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பான செய்திகளாகவும், இரண்டாம்நிலை உள்ளடக்கப்பகுப்பாய்வு 48 உள்ளடக்கங்களில், வன்முறைகளின் வகைப்படுத்தல் முதல்நிலையாகவும், மூன்றாம்நிலை உள்ளடக்க வகைப்படுத்தலில் தமிழ்ப்பெண்களுக்கெதிரான வன்முறைகள 14 Margaret, Schuler, ராதிகா (1995) என்பவரின் வகைப்படுத்தலை மையமாகக்கொணடு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## ஆய்வின் நம்பத்தகு தன்மையும் நேர்மைத்தகவும்

பண்பியல் சார் ஆய்வு முறையில் ஆய்வின் நம்பகத்தகு தன்மையும் நேர்மைத்தகவையும் வெளிப்படுத்தும் விதத்தில் கடந்த கால ஆய்வாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட வேண்டுகோள்களை ஆய்வாளர் நிறைவேற்றியுள்ளார் (Guba, and Lincoln, (1994) Silverman and Marvasti (2008). ஆய்வாளர் நம்பகத் தன்மையை வெளிப்படுத்துவதற்கு ஆய்வாளர் மிகச்சரியான தரவுப் பதிவுகளை மேற்கொண்டு அவற்றை பத்திரப்படுத்தி எழுதி முடிக்கப்பட்ட தரவுகள் இலத்திரனியல் பதிவேடுகள் பிறிதொரு நபரால் பரீட்சித்து பார்க்கப்பட்டது. பண்பியல் ஆய்வு முறையில் நிபுணத்துவம் பெற்ற ஆய்வாளர் ஒருவரால் இத்தரவுகள், மற்றும் முடிவுகள் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு அவரது திருத்தங்கள் ஏற்றுகொண்டு ஆய்வு தொடரப்பட்டது. (Silverman & Marvasti, 2008).

இவ் ஆய்வானது எண்ணக்கருப்பகுப்பாய்வினை அடிப்படையாகக்கொண்டு தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகள் சார்ந்த தமிழ்ப்பத்திரிகைச் செய்திகளை முதலாம் தர தரவுப்பகுப்பாய்வில் வகைப்படுத்தி இதன் மூலம் முதலாம் நிலை உட் குறியீட்டுப் பகுப்பாய்வில் பெண்கள் சார்ந்த 142 வன்முறை வடிவங்களை தமிழ்ப்பத்திரிகைச் செய்திகளிலிருந்து வகைப்படுத்தியுள்ளது. ஆரம்பநிலைக்குறியீட்டில் பெறப்பட்ட 111 குறியீடுகளிலிருந்து இரண்டாம் நிலைப் பகுப்பாய்வில் 48 eLCL வகையான வன்முறை வகைப்படுத்தல்களை அடையாளம் கண்டு மூன்றாம் நிலை வகைப்படுத்தலில் 14 வகையான பெண்களுக்கெதிரான வன்முறை வடிவங்களை அடையாளம் காட்டியுள்ளது (அட்டவணை 1). இவ் ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இலங்கைத்தமிழ்ப் பெண்களுக்கெதிரான வன்முறைகளை இவ் ஆய்வு பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளது உறவுகள் காணாமல் ஆக்கப்படுதல், பாலியல் வன்கொடுமை, கொலை, துஷ்பிரயோகம், கடத்தல், கற்பழிப்பு, தவறான வீடியோ பதிவுகள் செய்தல், மற்றும் சமூக வலைத்தளங்களினூடாக ஏமாற்றுதல், கொள்ளையடித்தல், துன்புறுத்தல், சொத்துக்களை மிரட்டிப் பறித்தல், பாலியல் இலஞ்சம், கர்ப்பிணி நிலையில் தாக்குதல்கள், பிறப்புறுப்புச்சிதைப்பு என்பனவாகும். ஏற்கனவே ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாரள்களால் வகைப்படுத்தப்பட்ட வன்முறை வடிவங்களுக்கு மேலதிகமாக இவ்வாய்வானது சில வேறுபட்ட வன்முறை செய்திகள் மூலமாக ஆய்வு செய்து அறிந்திருக்கிறது.

ஆய்வாளர்களால் பெண்கள் தொடர்பான வன்முறையினை வகைப்படுத்தும் போது அவர்களை மையப்படுத்திய துன்புறுத்தல்கள் (Adriand, 1996), மற்றும் இவ் வன்முறைகள் கணவன் மனைவிக்கு மேற்கொள்ளும் வன்முறைகள், ஏனைய குடும்ப அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள், சமூகத்தில் உள்ள பொதுவான அங்கத்தவர்களின் வன்முறைகள் எனவும், அரச நிறுவனங்களின் அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல், வன்முறைகள் எனவும் சில ஆய்வுகளில் பெண்களுக்கெதிரான வடிவங்களை வகைப்படுத்தியுள்ளது. (ராதிகா, 1995).

குறிப்பிட்ட ஆய்வின் முடிவில் தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறையானது குழந்தைகள், திருமணமாகாத பெண்கள், திருமணமாகிய பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபப்பெண்கள் என பெண்களில் பல்வேறு வகையினருக்கும் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்களாக பத்திரிகைச் செய்திகளின் உள்ளடக்கப் பகுப்பாய்வு வெளிப்படுத்துகின்றது. பாலியல் வன்கொடுமை, கூட்டு வன்புணர்வு, பிறப்புறுக்களைச் சிதைத்தல், கடத்தல், கற்பழித்தல் என்பன குழந்தைப் பராயத்திலிருந்து வயோதிபப் பருவம் வரை மேற்கொள்ளப்பட்டதாக செய்திகள் வெளிப்படுத்துகின்றது.

பெண்களின் சொத்துக்கள், உதாரணமாக தாலிக்கொடி, வீடு நகைகள், பணம் என்பவற்றை கொள்ளையடிப்பதற்காக உயிராபத்தை விளைவிக்கக் கூடிய வன் செயல்களில் ஈடுபடுவதோடு பாலியல் வன்புணர்வுகளின் பின் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளனர்.

திருமணமான பெண்களுக்கு கணவரால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் உதாரணமாக மிகவும் கூரிய ஆயதங்களால் தாக்குதல், கொலை செய்தல், பாலியல் வன்கொடுமை, கொள்ளை என்பனவற்றைக் குறிப்பிடலாம். தமது நெருக்கமன உறவான கணவராலேயே இவ்வாறான வன்முறைகளை தமிழ்ப்பெண்கள் அனுபவித்த வண்ணம் உள்ளனர். குறிப்பாக சில செய்திகள் பெண் குழந்தைகள் தமது தந்தையரால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாவதும், வேறு கொடுமைகளுக்கு உள்ளாவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவிகள் கடத்தப்படுதல் ஆசிரியர்களால் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் வன்புனர்வு, கூட்டு வன்புனர்வுக்கு உள்ளாதல், பிறப்புறுப்புசிதைப்பு என்பன முடிவுகளாக பெறப்பட்டுள்ளன. போரினால் மிக அதிகமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தமிழ் பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோருதல், சொத்துக்களை சூறையாடுதல், போரினால் காணமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி அலைந்து திரிதல் அவ்வாறு தேடும் செயற்பாடுகள் பல கீழ்த்தரமான சொற்பிரயோகங்கள் வன்முறைகளை அனுபவித்தல் என்பன செய்திகளில் காணப்படுகின்றன.

## ஆய்வின் முடிவும் பரிந்துரைகளும்

தமிழ்ப் பத்திரிகைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான செய்திகளை உள்ளடக்கப்பகுப்பாய்வு செய்து 142 விதமான வன்முறை செய்திகளில் 48 eLCL வகையான செய்திகளில் 14 வகையான தமிழ் பெண்களுக்கு எதிரான வன்முறைச் செய்திகளை இவ் ஆய்வு வகைப்படுத்தியுள்ளது. இலக்கிய மீளாய்வுடன் ஒப்பீடு செய்யும் போது, ஏற்கனவே பெண்கள் மீதான வன்முறை தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள் வகைப்படுத்தியுள்ள பெண்ணுக்கெதிரான வன்முறை வடிவங்களுக்கு வேறுபட்டதான புதிய வன்முறை வடிவங்களும் இவ் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவையாவன தாய்மை நிலையிலிருக்கும் பெண்களை கொடூரமாகத் தாக்குதல், கொலை செய்தல் வயோதிபப் பெண்களை கற்பழித்தல், கொள்ளையடித்தல், பெண்களிகளின் குழந்தைப் பருவத்தில் 10 வயதிற்கும் குறைந்த சிறு பெண் குழந்தைகளைப் பாலியல் துஸ்பிரயோகம் செய்தல், மற்றும் பாலியல்வன்கொடுமை

செய்தல் மிகவும் நெருக்கமான உறவினர்களான கணவன், தந்தை, சிறியதந்தை, மாமனார், மற்றும் ஏனைய மிக நெருங்கிய உறவினர்களால் குழந்தைகள் மற்றும் சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் வன்கொடுமை செய்தல் பாலியல் லஞ்சம் கோருதல் கொலை செய்தல் உறவுகளால் காணாமல் ஆக்கப்பட்டு நியாயம் கிடைக்காமல் அலைந்து திரிதல் என்பனவற்றை குறிப்பிடமுடியும்.

30 வருடகால யுத்தத்தின் விளைவு தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளிலும் உளவியல் நிலைமைகளிலும் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்கியுள்ளது. இவ் யுத்தமானது ஒப்பீட்டு ரீதியில் பெண்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. போர்ச்சூழலின் போது ஏற்பட்ட வன்முறைகளுக்கான முடிவு போருக்கு பின்னரான சூழலில் முற்றிலும் இல்லாது போய்விட்டது என்னும் சமூக எண்ணத்தை மாற்றும் வகையில் போருக்கு பின்னரான சமூகத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் மீது மேலும் வன்முறைகள் அதிகரித்து செல்கின்றன என்பதற்கு பத்திரிகைகள் ஆதாரங்களாகும். செய்திகளாக வெளிவந்தமைக்கு மேலதிகமாக பெண்கள் தொடர்பான வன்முறை வடிவங்கள் வெளிப்படா வடிவங்களாக இருக்கமுடியும் எனவும் இவ் ஆய்வு எடுத்துரைக்கின்றது. இவற்றைச் சேர்க்கும் போது வன்முறை வடிவங்கள் இன்னமும் விரிவுபடுத்தப்படலாம்.

பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் மற்றும் அரசநிறுவனங்கள் .இவ் வன்முறை சார்ந்த விழிப்புணர்வுகளை கொண்டிருக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி இவ் வன்முறைகளுக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்கான தண்டனைகளை வழங்குவதோடு வன்முறைகளை மேற்கொள்வோர் மீது மிகவும் இறுக்கமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தண்டனைகளை வழங்கவேண்டும் என்றும் நீதித் துறையானது இவ்வன்முறைகளுக்கு எவ்வாறான தண்டனைகளை வழங்கியுள்ளது எனவும் பாதிக்கப்பட்ட பெண்கள் சிறுமிகள் குழந்தைகள் வயோதிபர்களுக்கு எவ்வாறான இழப்பீடுகள் மற்றும் உளவள செயற்பாடுகள் மேற்கொள்ளபட உள்ளன என்பது தொடர்பிலும் பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் கண்காணிப்புக்களை மேற்கொள்ள வேுண்டும் எனவும் இவ் ஆய்வு பரிந்துரைக்கின்றது.

**உசாத்துணைகள்**

Coomaraswamy R. (1997), Women of the LTTE, Frontline 10th January.
Coomaraswamy, R. (1998), Report of the Special Rapporteur on Violence against women its causes and consequences, UN Commission on h;uman Rights E/CV.4/1998/5421.
Coomaraswamy, R. (1999), A question of h;onour: Women Ethnicity and Armed Conflict, Lecturer delivered at the third minority Rights lecture on 25th May Geneva, http://www.sacw.net/Wmov/RCoomaraswamyOnh;onour.html accessed 14/12/2004
Coomaraswamy, R. (2005), The varied contours of violence against women in

South Asia, presented at the 5th South Asian regional ministerial conference celebrating Beijing plus ten Islamabad, Pakistan.

Gómez, A., & Meacham, D. (2001). Reflections of inequality. Women and mental health.López, A. C., Caballero, A. G., & Rodríguez, L. C. (2010). Feminicide in Latin America and the Movement for Women's h;uman Rights. *Terrorizing Women. Feminicide in the Americas*, 157-178.

Schuler, M. (Ed.). (1992). *Freedom from Violence: Women's Strategies from around the World.* OEF International.

Report by UN Special Rapporteur on Violence against Women, Jeyaraj D.B.S 2000) 22/12/2000 57th session of the commission of h;uman Rights: Item No 12 of the Agenda

**அட்டவணை : உட்பொருள் குறியீடு, முதல்நிலை, உட்கிடை மற்றும் வகைப்படுத்தல்.**

1. அச்சுறுத்தல், கொள்ளை
2. கணவன் மனைவியைக் குத்திக் கொலை
3. தொல்லை
4. ஆசிரியர் மாணவியைத் துன்புறுத்தல்
5. கொலை
6. கணவரால் எரிக்கப்பட்ட பெண்
7. ஆசிரியரால் மாணவி துஷ்பிரயோகம்
8. மாணவி மீது கூட்டுப் பாலியல் வன்மம்
9. சாலைக்கு அழைத்துச் சென்று கொடூரம்
10. விடுதியில் பிரத்தியேகமாக படம் பிடித்தல்
11. கல்லூரி மாணவி துஷ்பிரயோகம்
12. கர்ப்பிணி மீது வாள் வெட்டு
13. சிறுமி மீது துஷ்பிரயோகம்
14. கட்டி இழுத்துச் சென்று துன்புறுத்தல்
15. சிறுமிக்கு வன்கொடுமை
16. குடும்பப் பெண் கொலை
17. அவர்களுக்குத் தெரியாமல் கர்ப்பத்தடை செய்தல்
18. தாக்குதல் நடத்திய அதிபர் பதவி நீக்கம்
19. மாணவி நீர்த்தேக்கத்திலிருந்து சடலமாக மீட்பு
20. 20 பெண்களில் ஒருவருக்கு பிறப்புறுப்பு சிதைக்கப்படல்
21. கன்னியாஸ்திரி மீது துஷ்பிரயோகம்
22. கொலை
23. பெண்கள் பாதுகாப்புக் கோரல்
24. காதலியை பெற்றோல் ஊற்றி எரித்த காதலன்
25. கொலை
26. கொலை
27. பெண்களைக் கண்காணிக்கப் புதிய செயலி
28. சட்டரீதியற்ற மனைவி கொலை
29. கத்திக் குத்துக்கு இலக்கான பெண்
30. அச்சுறுத்திக் கையொப்பம் பெறும் நிறுவனங்கள்
31. உள்ளாடைக்குள் இருந்த பொருட்கள்
32. பாலியல் இலஞ்சம் கோரல்

| | | | |
|---|---|---|---|
| 1. | அச்சுறுத்தல் | 1. | உறவுகள் காணாமல் ஆக்கப்படுதல் |
| 2. | கொள்ளை (கர்ப்பிணி, மூதாட்டி) | 2. | பாலியல் வன்கொடுமை |
| 3. | கணவரால் குத்திக் கொலை | 3. | கொலை |
| 4. | ஆசிரியரால் மாணவி துஸ்பிரயோகம் | 4. | பாலியல் துஸ்பிரயோகம் |
| 5. | கணவனால் எரித்துக் கொலை | 5. | கடத்தல் |
| 6. | மாணவி மீது கூட்டு பாலியல் வன்மம் | 6. | கற்பழிப்பு |
| 7. | வீதிக்கு இழுத்து வரப்படல் | 7. | தவறான வீடியோ பதிவுகள் செய்தல் |
| 8. | பிரத்தியேகமாக படம் பிடித்தல் | 8. | சமூக வலைத்தளங்களினூடாக ஏமாற்று-தல் |
| 9. | கல்லூரி மாணவி துஸ்பிரயோகம் | 9. | கொள்ளையடித்த |
| 10. | கர்ப்பிணி மீது வாள் வெட்டு | 10. | துன்புறுத்தல் |
| 11. | சிறுமி மீது துஸ்பிரயோகம் (தந்தை, மாமன், இளைஞர் குழு) | 11. | சொத்துக்களை மிரட்டிப் பறித்தல் |
| 12. | கொலை (குடும்பப் பெண், சிறுமி, இளம் பெண்) | 12. | பாலியல் இலஞ்சம் |
| 13. | அவர்களுக்குத் தெரியாமல் கர்ப்பத்தடை செய்தல் | 13. | கர்ப்பிணி நிலையில் தாக்குதல்கள் |
| 14. | மாணவி நீர்த்தேக்கத்தில் சடலம் | 14. | பிறப்புறுப்புச்சிதைப்பு |
| 15. | 20 பெண்களில் ஒருவருக்கு பிறப்புறுப்பு சிதைக்க-ப்படல் | | |
| 16. | கன்னியாஸ்திரி துஸ்பிரயோகம் | | |
| 17. | பாதுகாப்புக் கோரல் | | |
| 18. | காதலியை எரித்த காதலன் | | |
| 19. | பெண்களைக் கண்காணிக்க புதிய செயலி | | |
| 20. | கத்திக் குத்துக்கு இலக்கான பெண் | | |
| 21. | அச்சுறுத்தி கைகொப்பம் பெறும் நிதி நிறுவனங்கள் | | |
| 22. | பாலியல் இலஞ்சம் கோரல் | | |
| 23. | அமைப்புத் தலைவி மீது தாக்குதல் | | |
| 24. | மருத்துவருக்கு எதிரான முறைப்பாடு | | |
| 25. | இளைஞரால் சிறுமி துஸ்பிரயோகம் | | |
| 26. | மாமியாரைத் தாக்கிய மருமகன் | | |
| 27. | பெண் பத்திரிகையாளர் சுட்டுக் கொலை | | |
| 28. | பெண் எழுத்தாளர் சுட்டுக் கொலை | | |
| 29. | வெட்டி மற்றும் வெடி வைத்துக் கொலை | | |
| 30. | மாத்திரை விழுங்கி தற்கொலைக்கு முயன்ற பெண் வைத்தியர் | | |



View publication stats